STC.No. 1491–2025
நாள் 27.02.2026.
P.W.1 – (ராஜ்குமார் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் முன்னாள் ராணுவ வீரர். நான் தற்போது பழைய இரண்டு சக்கர வாகனங்கள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்கிறேன். நான் தனியாக கடை வைத்திருக்கவில்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன். நான் நீதிமன்றத்தில் என் வருமான வரி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் மகனின் பெயர் ஹரிராம் என்றால் சரி. என் புகார் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் நான் என்ன தொழில் செய்கிறேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் முன்னாள் ராணுவவீரர் என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சாட்சி புகார் மனு மற்றும் நிருபண வாக்கமூலத்தைக் குறிப்பிட்டு அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என தெரிவித்தார். நான் எதிரிக்கு ரூ.5 லட்சம் கொடுத்ததாக சொல்வது வட்டி என்ற மறுபயன் இல்லாமல் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரி. எனக்கு 10 ஆண்டுகள் பழக்கம்.

நான் கொடுத்ததாக சொல்லும் ரூ.5 லட்சம் கடனிற்கு வேறு ஆவணங்கள் எதிரியிடம் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்றால் காசோலை கொடுத்தார். வேறு ஆவணங்கள் பெறவில்லை. என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம்கேட்டார் என்றும் நான் எந்த தேதியில் எதிரியை வரச்சொன்னேன் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் எதிரிக்கு சாட்சிகள் முன்னிலையில் பணம் கொடுத்ததாக சொல்வது சாட்சியின் பெயர், முகவரி விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. என் சட்ட அறிவிப்பில் நான் கையொப்பம் செய்து எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் நான் கையொப்பம் செய்துதான் அறிவிப்பு அனுப்பினேன். நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த ஆவணத்தில் கையொப்பம் இல்லாத ஆவணமாக இருந்தால் அது தவறு என்றால் சரி. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பு நான் எதிரிக்கு 20.08.2025 அன்று அனுப்பியதாக சொல்லும் சட்ட அறிவிப்பு என்றால் சரி. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்பில் என் கையொப்பமோ வழக்கறிஞர் கையொப்பமோ இடம்பெறவில்லை என்றால் சரி.

என்னிடம் காட்டப்படும் 20.08.2025 தேதியிட்ட சட்ட அறிவிப்பு என் வழக்கறிஞர் அனுப்பியதாகும். அந்த சட்ட அறிவிப்பு அஞ்சல் உறையுடன் **எ.சா.ஆ.1** ஆகும். எ.சா.ஆ.1ல் என் கையொப்பமோ என் வழக்கறிஞரின் கையொப்பமோ இடம் பெறவில்லை என்றால் சரி. பு.சா.ஆ.3 சட்ட அறிவிப்புக்கும் எ.சா.ஆ.1 சட்ட அறிவிப்புக்கும் வேறுபாடு உள்ளது என்றால் எ.சா.ஆ.1 Letter

Padல் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது. பு.சா.ஆ.3 வெள்ளைதாளில் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது, சங்கதிகள் அனைத்தும் ஒன்றுதான். என் சட்ட அறிவிப்பு, புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் இந்த வழக்கு கடன் தொகையை தவிர எதிரி என்னிடம் வேறு பணபரிவர்த்தனை வைத்துக் கொண்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்த புகார் மனுவில் எதிரி எல்ஐசி முகவர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எதிரியின் மனைவியின் வங்கி கணக்கில் இருந்து என் வங்கி கணக்கிற்கும் என் மகன் ஹரிராம் வங்கி கணக்கிற்கும் பணம் பல்வேறு தேதிகளில் ரூ.15,000/- வரை செலுத்தப்பட்டது என்றால் எதிரி சிறிய கடன் தொகை வாங்குவார், அவ்வாறு அதனை வங்கியில் செலுத்துவார். 2022ம் ஆண்டில் மே மாதம் முதல் 2025ம் ஆண்டு வரை எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகை ரூ.2லட்சத்திற்கு வட்டியும் அசலுமாக அவரது மனைவியின் வங்கி கணக்கில் இருந்து என்னுடைய வங்கி கணக்கிற்கும் என் மகனின் வங்கி கணக்கிற்கும் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

நான் சொன்னதுபோல் எதிரி என்னிடம் 25.06.2025 அன்று சாட்சியின் முன்னிலையில் பணம் வாங்காததால் நான் சாட்சியின் பெயரை என்னுடைய வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் 25.06.2025 அன்று எந்த கடனும் வாங்காததால் அவர் எனக்கு சட்டப்படி எந்த தொகையும் செலுத்த அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் நானோ என் வழக்கறிஞரோ கையொப்பம் செய்யாமல் அனுப்பியதால் எதிரி எந்த பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1 எதிரிக்கு கிடைத்தப்பின் எதிரி என்னை தொடர்பு கொண்டபோது, நான் எதிரியிடம் என் வழக்கறிஞர் அவ்வாறு தவறுதலாக செய்துவிட்டார் என்றும், நான் எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டேன் என தெரிவித்தேன் என்றால் சரியல்ல. எதிரியின் கடைக்கு பின்தான் என் வீடு என்றால் சரி. 2022ம் ஆண்டு என்னிடம் வாங்கி திரும்ப செலுத்தப்பட்ட ரூ.2லட்சத்திற்கு ஆதரவுக்காக கொடுத்த காசோலையை நான் இந்த வழக்கிற்காக தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிடுவார் என பயந்து நான் அவசர கதியில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கு ஒரே நாளில் ரூ.5லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. நான் முன்னாள் ராணுவ வீரர் எனக்கு மாத ஓய்வூதியம் ரூ.40,000/- வருகிறது. நான் வாகனங்கள் வாங்கி விற்பனை செய்வதாக சொல்வதற்கு பதிவேடு ஏதும் பராமரிக்கவில்லை என்றால் சரி. நான் முன்னாள் ராணுவ வீரர் என்பதற்கும் நான் சொல்வதுபோல் ஓய்வூதியம் பெறுவதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அவ்வாறு பணம் கொடுக்க வசதி இல்லை என்பதால்தான் நான் என் வருமான வரிக் கணக்கு மற்றும் நான் மேற்சொன்ன முன்னாள் ராணுவவீரர் என்பதற்கும் ஓய்வூதியம் பெறுவதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரியல்ல. நான் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்திருந்தால் ரூ.20,000/-ற்கு மேல் ரொக்க பரிவர்த்தனை செய்யக்கூடாது என எனக்கு ஆடிட்டர் தெரிவித்திருப்பார் என்றாலும் நான் வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்யாததால் எதிரிக்கு ரொக்கமாக பணம் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

நான் வழக்கில் சாட்சிகளின் பெயரை குறிப்பிடாமல் சாட்சிகளின் முன்னிலையில் பணம் கொடுப்பதாக சொல்லியிருப்பது பிற்பாடு நான் சாட்சியை ஜோடித்துக் கொள்ளலாம் என்ற காரணத்திற்காக என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி என்னிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கவில்லை என்றாலும் என்னிடம் வாங்கிய 2 லட்சத்தை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. எதிரி கடை வைத்திருக்கும் விபரம் மட்டும்தான் எனக்கு தெரியும் என்றாலும் எதிரியின் குடும்பத்தார் விபரம் எனக்கு தெரியாது என்றாலும் அதனால்தான் அது குறித்து நான் என் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி நான் வசிக்கும் தெருவில்தான் வசிக்கிறார்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

27/2/21

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.